2013 ஏப்ரல் 17] [செல்வி ஜெ ஜெயலலிதா]

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் முனைப்பான நடவடிக்கைகள்மூலம் தமிழகத்தில் இரண்டாவது வெண்மைப் புரட்சி விரைவில் நிறைவேறும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) பெண் குழந்தைகளுக்கான நிதியுதவியை அதிகரித்து, அங்கன்வாடி மையங்களுக்கு எடைக் கருவிகள் வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆணும், பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவில் ஓங்கி இவ்வையகம் தழைக்குமாம்" என்ற மகாகவி பாரதியாரின் வாக்கிற்கிணங்க, பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், பெண்ணுரிமையை நிலைநாட்டும் வகையிலும் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், திருமண நிதியுதவித் திட்டங்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் என பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பெண் சிசுக் கொலையை முற்றிலும் ஒழிக்கும் வகையிலும், பெண் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்தும் வகையிலும், எனது ஆட்சிக் காலத்தில் 1992 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பதிவான பெண் குழந்தைகள் பெயரில் 1,500 ரூபாய்க்கான வைப்புத் தொகை பத்திரங்கள் வழங்கப்பட்டன. பின்னர், 2001 ஆம் ஆண்டு இத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டது. இதன்படி, ஒரு குடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் இருந்தால், அப்பெண் குழந்தையின் பெயரில் 22,200 ரூபாய் வைப்புத் தொகையும், இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால் ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் தலா 15,200 ரூபாயும் வைப்பீடு செய்யப்பட்டது. இந்தத் தொகை, 20 ஆண்டுகள் கழித்து வட்டியுடன் திருப்பி அளிக்கப்படும். தற்போது இந்தத் தொகை முறையே 50,000 ரூபாய் என்றும், 25,000 ரூபாய் என்றும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இந்தத் திட்டத்தின்கீழ் 1992 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட பெண் குழந்தைகள் பெறும் முதிர்வுத் தொகை குறைவாக உள்ளதைக் கருத்தில் கொண்டும்,

இவர்களுக்கு தற்போது திருமண உதவித் திட்டத்தின் பயன் அளிக்கப்படவில்லை என்பதைக் கருத்தில் கொண்டும், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பயன் பெறுபவர்களுக்கு மற்ற திருமண உதவித் திட்டங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதன்படி, இவர்களுக்கு 4 கிராம் தங்கத்துடன் கல்வித் தகுதிக்கேற்ப திருமண உதவித் தொகையும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11-35

இது மட்டுமல்லாமல், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பதிவு செய்துள்ள பயனாளிகளின் வைப்புத் தொகைக்கான முதிர்வுத் தொகை அவர்கள் 20 வயது பூர்த்தி அடைந்தவுடன் வழங்கப்பட்டு வந்தது. இக்குழந்தைகளின் உயர் கல்விக்குப் பயனளிக்கும் வகையில், இந்த முதிர்வுத் தொகை இனிமேல் 18 வயது பூர்த்தி அடைந்தவுடன் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதனால், நடப்பு நிதியாண்டில் 30,000 பெண்கள் பயனடைவர். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இதேபோன்று, ஐந்து திருமண நிதியுதவித் திட்டங்களில், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான நிதியுதவித் திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் மற்றும் ஈ.வே.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதியுதவித் திட்டம் ஆகியவற்றின்கீழ் நிதியுதவி பெற குடும்ப ஆண்டு வருமானம் 24,000 ரூபாய் என உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தக் குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு 24,000 ரூபாயிலிருந்து 72,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தாய்-சேய் நலத்திற்கு வழிகாட்டும் திட்டமான ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் பணியாற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு சனிக்கிழமை அன்றும், அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை அன்றும் விடுமுறை அளிக்கப்படுகிறது. அங்கன்வாடி உதவியாளர்கள் மற்றும்

2013 ஏப்ரல் 17] [செல்வி ஜெ ஜெயலலிதா]

அங்கன்வாடி பணியாளர்களின் பணிகள் முற்றிலும் மாறுபட்டு ஒருவரையொருவர் சார்ந்து இருப்பதாலும், ஒருவருடைய வேலையை மற்றொருவர் முழுமையாகச் செய்ய முடியாத சூழ்நிலை உள்ளதாலும், இவர்களுக்கு வெவ்வேறு நாட்களில் விடுமுறை அளிப்பது நடைமுறையில் சாத்தியமற்றதாக இருக்கிறது. இதனைக் கருத்தில்கொண்டும், ஞாயிற்றுக்கிழமை அனைவருக்கும் பொது விடுமுறை என்பதாலும், அங்கன்வாடி ஊழியர்கள் அனைவரும் தங்களது குடும்பத்துடன் வார இறுதி நாளை மகிழ்வுடன் செலவிடும் வகையில், அவர்கள் அனைவருக்கும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அங்கன்வாடிகளில் சத்துணவு பெறும் 2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட வேண்டிய சத்துணவு, வீட்டிற்கு எடுத்துச் செல்லும் வகையில் சமைக்கப்படாத உணவுப் பொருளாக குழந்தைகளின் பெற்றோர்களிடம் அங்கன்வாடி ஊழியர்களால் சனிக்கிழமை அன்றே வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இது மட்டுமல்லாமல், அங்கன்வாடி மையங்கள் மூலம் குழந்தைகள், வளர் இளம் பெண்கள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் எடையைக் கண்காணிக்கும் வகையில், தாய்மார்கள் மற்றும் வளர் இளம் பெண்களுக்காக 16,988 எடை பார்க்கும் கருவிகளும், குழந்தைகளுக்கான 11,333 எடை பார்க்கும் கருவிகளும், பச்சிளம் குழந்தைகளுக்காக 54,439 எடை பார்க்கும் கருவிகளும் 7 கோடியே 11 இலட்சத்து 89 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்கி எடைக் கருவிகள் இல்லாத அங்கன்வாடி மையங்களுக்கு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சமூக நலத் திட்டங்களின்கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கான ஓய்வூதியம் 1,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ள நிலையில், அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்களுக்கான சிறப்பு ஓய்வூதியம் 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட வேண்டும் என்ற ஊழியர்களின் கோரிக்கையினை ஏற்று, அவர்களுக்கான சிறப்பு ஓய்வூதியம் 1,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 ஏப்ரல் 17 முற்பகல் 11-40

இதன்மூலம் 56,830 சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் பயன் பெறுவர். இதற்காக 26,95,00,000 ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மகளிர் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. பால் பண்ணைகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல் மற்றும் பெண் குழந்தைகளுக்கான நிதியுதவியை அதிகரித்து, அங்கன்வாடி மையங்களுக்கு எடைக் கருவிகள் வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் வளர்ச்சிக்காக, தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சிக்காக, இந்தச் சட்டப் பேரவை கூடுகிற எல்லா நாட்களிலுமே 110-வது விதியின்கீழ் மின்சார வசதி, சாலை வசதி, குடிநீர் வசதி, வீட்டு வசதி என்று ஒவ்வொரு நாளும் இந்த நாட்டு மக்களின் வயிற்றிலே பால் வார்த்துக் கொண்டிருக்கின்ற முதலமைச்சர் அம்மா அவர்கள், பாலின் தரத்தை உயர்த்துகிற வகையிலே, தமிழகத்திலே இரண்டாவது வெண்மைப் புரட்சிக்கு வித்திடுகிற வகையிலே, பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

27 இலட்சம் லிட்டர் கொள்முதல், அதேநேரத்திலே ரூபாய் 3,000 கோடிக்கு மேலே விற்பனை என்கிற வகையிலே 'ஆனந்த்' என்கிற வட இந்திய பால் நிறுவனத்தினுடைய அந்தப் பெருமையைப் பின்னுக்குத் தள்ளுகிற வகையிலே, நம்முடைய 'ஆவின்' முன்னுக்கு வருகிற வகையிலே, 'ஆனந்த்' நிறுவனத்தைவிட 'ஆவின்' நிறுவனம்தான் இந்தியாவிலேயே சிறப்புமிக்க நிறுவனமாக